பக்கங்கள் 15+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 04 வியாழக்கிழமை 16.01.2025 | அதிர்வு 168

## தீர்வுத் திட்ட நகர்வு குறித்து சனியன்று முடிவு எடுப்போம்

### சுமந்திரன் தெரிவிப்பு



(எஸ்.ரகுதீஸ்)

“புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாகத் துப்பாக்கிச்சூடு!

## இருவர் பலி; மேலும் இருவர் படுகாயம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக இன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வழக்கொன்றுக்காக நீதிமன்றத்திற்கு வருகை தந்தவர்களை இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில், படுகாயமடைந்தவர்களில் இரண்டு ஆண்கள் உயிரிழந்தனர்.

02









# மாணவி கடத்தல் சம்பவம்: சந்தேகநபர்களுக்கு மறியல்

கண்டியில் பாடசாலை மாணவி ஒருவர் வானில் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை நீதிவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கண்டி, கம்பளை, தவுலகல பிரதேசத் தில் கடந்த வாரம் பாடசாலை மாணவி ஒருவர் சக மாணவருடன் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது வலுக்கட்டாயமாக வானில் கடத்திச் செல்லப்பட்டார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், பிரதான சந்தேகநபர் அம்பாறை நகரத தில் வைத்து கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பின்னர், கடத்திச் செல்லப்பட்ட மாணவி பொலிஸ் நிலையத்தில் ஒப்ப டைக்கப்பட்டார்.

அதேவேளை, மாணவியைக் கடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்ட வானுடன் அதன் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட மேலதிக விசாரணை களில், பிரதான சந்தேகநபரின் நண்ப னும் சந்தேகத்தின் பேரில் கைது செய் யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

# யாழில் கரையொதுங்கிய மர்ம வீட்டிலிருந்து 18 புத்தர் சிலைகள் மீட்பு!






யாழ். வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில் பகுதியில் நேற்று கரை யொதுங்கிய மர்ம வீட்டிலிருந்து 18 புத்தர் சிலைகளைப் பொலிஸார் மீட்டுள்ள னர்.

அண்மைக்காலமாக கடல் நிலை மாற்றங்களால் கடல் சீற்றங்கள், சூறாவளி, புயல் மற்றும் நிலநடுக்கம் போன்றவை பல தென் கிழக்கு ஆசியா நாடுகளில் ஏற்பட்டு வருகின்றன. இதன்போது மியன்மாரில் இருந்து இந்த நினைவாலயம் வந்து இருக்க லாம் என நம்பப்படுகின்றது.

குறித்த வீட்டில் பௌத்த சமயத் தைத் தாங்கிய பல மரபு அம்சங்கள் காணப்பட்டன.

இந்நிலையில், சம்பவ இடத்துக் குச் சென்ற மருதங்கேணி பொலிஸார் அதில் காணப்பட்ட 18 புத்தர் சிலைகளை யும், செப்பேடுகளையும் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சிலைகள் மற்றும் பொருட்கள் தற்போது மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் வைக்கப் பட்டுள்ளன.

**மன்னார்...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மன்னார், நொச்சிக்குளம் கிராமத் தைச் சேர்ந்த சவேரியன் அருள் (வயது 61) மற்றும் செல்வக்குமார் யூட் (வயது - 42) ஆகியோரே உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த ஆண் ஒருவர் மேல திக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்-தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

உயிரிழந்த இருவரும், படுகாய மடைந்த ஆண் ஒருவரும் இன்று வியாழக்கிழமை மன்னார் நீதிமன் றத்தில் இடம்பெற இருந்த வழக்கு விசாரணைகளுக்காக வருகை தந்த போதே மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டு விட்டு தப்பிச் சென்றார் என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார், நொச்சிக்குளம் பகுதி யில் கடந்த 2022 ஆம் ஆண்டு நடை பெற்ற இரட்டைப் படுகொலையைத் தொடர்ந்து நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்கு தல் சம்பவங்கள் இடம்பெற்று வந்த நிலையில் இவர்கள் மீதும் துப்பாக் கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# இந்தியத் தூதுவர் - சஜித் சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது.

பொருளாதார, சமூக, மற்றும் அரசியல் விவகாரங்கள் பல குறித்து இங்கு இரு தரப்பினரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதோடு, அருகிலுள்ள அண்டை நாடு என்ற வகையில் பல தசாப்தங்களாக இந்திய அரசு இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது நன்றியைத் தெரிவித்தார்.



அவ்வாறே, நமது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொண்டு, வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்குத் தேவையான ஆதரவைத் தொடர்ந்து வழங்குமாறும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

# அதீத போதையுடன் 2 மாணவர்கள் கைது

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் உள்ள பிரபல பாடசாலையொன்றின் இரண்டு மாணவர்கள் அதீத போதையுடன் பொலிஸாரால் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் இருவரும் போதை மாத்திரைகளை உட்கொண்டுள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்ததையடுத்து மாணவர்களுக்கு அவற்றை விநியோகித்த நபர்களைக் கைது செய்வதற்குப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, கைது செய்யப்பட்ட இரண்டு மாணவர்களையும் மருத்துவ பரிசோதனைக்குப் பின்னர் சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வட்ஸ் அப் செயலி ஊடாக மாணவர்களை உள்ளடக்கிய குழுக்கள் ஊடாக போதை மாத்திரை விநியோகங்கள் நடைபெற்று வருகின்றன என்று யாழில் பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், பொலிஸார் அது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனப் பல தரப்பினரும் கடந்த காலங்களில் கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## தீர்வுத்திட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவஞானம் சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பேசி வருகின்ற விடயம் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத்துக்கு எதிரான நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பேசி முடிவெடுப்போம்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,


"உடுப்பிட்டி மதுபானசாலை ஏன் தொடர்ந்தும் இயங்க வேண்டும் என்பது தொடர்பில் வழக்கு சாட்சியமளிப்பு இடம்பெற்று வருகின்றது. நாட்டிலே அதிகரித்த மதுபானசாலைகள் தொடர்பில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதிகரித்த மதுபானப் பாவனையால் நேற்றும் பருத்தித்துறையில் வாள்வெட்டு, கத்திக்குத்து இடம்பெற்றுள்ளது.

மன்னாரில் இன்று நீதிமன்றின் முன் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. அதில் இருவர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான நிலை நாட்டுக்கு நல்லதல்ல.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சமாக கடந்த காலத்தில் பார் லைசன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. இலஞ்சத்தை ஒழிப்போம், பார் லைசன்ஸ் விவகாரத்தை வெளிப்படுத்துவோம் என்று கூறி வந்தவர்கள் இன்று வரை அதனை வெளிப்படுத்தவில்லை. இவர்களும் இலஞ்சத்துக்குத் துணைபோனவர்களாகத்தான் பார்க்க முடியும். நாம் சவால் விடுகின்றோம், முடிந்தால் பார் லைசன்ஸ் விவகாரத்தை உடன் வெளியிடுங்கள். இல்லையேல் நீங்களும் ஊழல்வாதிகள்தான்.

இலங்கை விடயம் சம்பந்தமாக தி.மு.கவின் எம்.பி. கனிமொழியுடன் சந்திப்பை நடத்தியிருந்தோம். மத்திய அரசில் தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை குறைந்துள்ளது.

இலங்கைத் தமிழர்கள் தீர்வு விடயத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு மூன்று ஆண்டுகள் தேவை என்று கூறுகின்றது. அவ்வாறு தேவையில்லை. இது ஏற்கனவே இணங்கிக்கொண்ட விடயம். எனவே, இவ்வளவு காலம் தேவையில்லை. காலத்தை இழுத்தடிப்பது அதை இல்லாமல் செய்வதற்கான ஒரு திட்டம்." – என்றார்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா கலைநிகழ்வுகள்!

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா கலை நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் (18) சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.286, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்ச்சிகளாக கிராமிய நடனம், ஒயிலாட்டம், 'பவளத்தேர்' இசைநாடகம் போன்றவற்றுடன் ' சமூக ஊடகங்கள் இன்று மக்களை அறிவுடையோராக்குகின்றன – அடிமைப் படுத்துகின்றன' என்னும் தலைப்பிலான பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளன.

# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

**(க.கிஷாந்தன், தலவாக்கலை பி.கேதீஸ், மஸ்கெலியா)**

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கத் தில் இருந்து நேற்று ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று தலவ ாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமொன்று மிதப்பதைக்கண்டு பிரதேசவாசிகள் தலவாக்கலை பொலிஸ ருக்கு அறிவித்துள்ளனர். அதன்பின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட ஆண் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரழந்தாரா அல்லது நீர் தேக்கத்தில் பாய்ந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து நீர்தேக்கத்தில் எறிந்து சென்றார்களா என்பது தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

லிந்துல, மட்டுகலை தோட்டத்தை சேர்ந்த இராமையா பாரதிராஜா (வயது 40) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.





## வட்டுக்கோட்டை சமுர்த்தி வங்கியில் பொங்கல் விழா

**(எஸ்.நிதர்ஷன்)**

சங்கானை பிரதேச செயலர் பிரி வுக்கு உட்பட்ட வட்டுக்கோட்டை பிரதேச சமுர்த்தி வங்கியில் பொங்கல் விழா சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் நா.அகிலன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சமய ரீதியான சடங் குகளுடன் வங்கி முன்றலில் பொங்கல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் சமுர்த்தி வங்கி அதிகாரிகள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## போட்டடிக்கப் போகிறதா அரசு?

வரலாற்றில் மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்ட இலங்கை இப்போது அதன் பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டத்தில் நிற்கிறது. இலங்கைத் தீவுக்கு இந்த ஆண்டின் - 2025 இன் - முதல் பாதி மிகவும் முக்கியமான காலகட்டமாக இருக்கும் என்று வரித்துறை சார்ந்த நிபுணர் ஒருவர் கூறியிருக்கின்றார்.

''இது, குறிப்பாக உலகளாவிய வர்த்தகம் மற்றும் முதலீட்டில் நிலவும் புவிசார் மடைமாற்றங்களை மேம்படுத்தும் திறன் கொண்ட தொழில்களை இலங்கையில் ஊக்கப்படுத்தத் தேவையான உள்கட்டமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதாக இருக்கும். புவிசார் அரசியல் மாற்றங்களின் அடிப்படையில் நாங்கள் சரியான நேரத்தில் இருக்கிறோம். அங்கு தொழில்கள் தொடர்பான விநியோகச் சங்கிலி மற்றும் ஆதாரங்கள் பல்வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றைச் சரியாக அடையாளம் கண்டு, கவர்ந்திழுத்து, நம் பக்கம் திருப்பி, நாம் ஆதாயம் தேட கனகச்சிதமான சமயம் இதுதான்.'' - 'எர்ன்ஸ்ட் அண்ட் யங் பார்ட்னர் டேக்ஸ்' நிறுவனத்தின் சுலைமான் நிஷ்தார் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

''நாம் (நாடு) எதை ஈர்க்க - கவர - வேண்டும், எதில் முதலீடு செய்ய வேண்டும் என்பதில் இந்த ஆறு மாதங்கள் முக்கியமானவையாக இருக்கும். நாம் மேலும் பொது - தனியார் கூட்டாண்மை முயற்சிகளை உருவாக்க வேண்டும். பொருளாதார மண்டலங்களை அமைப்பதும் மற்றொரு முயற்சியாகும்'' என்று அவர் மேலும் கூறினார்.

நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட பொருளாதாரக் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் தனது கருத்துக்களை இப்படிப் பகிர்ந்துகொண்டார்.

இந்த முயற்சியை முன்னெடுப்பதற்கு வசதியாக இலங்கையில் ஏற்கனவே பொருளாதார மாற்றத்துக்கான சட்டம் (Economic Transformation Act - ETA) என்ற 'சக்திவாய்ந்த சட்டம்' கைவசம் இருப்பதாக வரித் துறை வல்லுநரான சுலைமான் நிஷ்தார் சுட்டுகின்றார்.

இந்தப் பொருளாதார மாற்றத்துக்கான சட்டத்தின் படி இலங்கை முதலீட்டுச் சபை (Board of Investment - BOI) மூன்று வேறுபட்ட அமைப்புகளாக மாற்றப்பட வேண்டும். பொருளாதார ஆணைக்குழு, இன்வெஸ்ட் ஸ்ரீலங்கா கட்டமைப்பு மற்றும் இலங்கை (பொருளாதார) மண்டலங்கள் என்பவையே அவை.

இலங்கை முதலீட்டுச் சபையின் முக்கிய பகுதிகளை மறுசீரமைப்புக்கு உட்படுத்திய இந்தச் சட்டத்தின் பிரகாரம், சபாநாயகரால் சட்டம் சான்றளிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அது செயல்படத் தொடங்க வேண்டும். அப்படி 2024 ஒகஸ்ட் 9 ஆம் திகதி சான்றளிக்கப்பட்ட சட்டம், நவம்பர் 9 ஆம் திகதியிலிருந்து முழு அளவில் செயல்படத் தொடங்கியிருக்க வேண்டும்.

ஆயினும் சட்டம் முழு அளவில் செயல்பட தொடங்கி இரண்டு மாதங்கள் கடந்த பின்னரும் அதன் மூலம் வழிமொழியப்பட்ட கட்டமைப்புகளை முன்னெடுப்பதற்கு வழி செய்யும் வர்த்தமானி அறிவித்தல் எதுவும் இதுவரையில் வெளியாகவில்லை.

பொருளாதாரப் பெருவீழ்ச்சியில் இருந்து இலங்கை மீளுவதற்கு - இலங்கையைப் பிணை எடுப்பதற்கு - முன்வந்த சர்வதேச நாணய நிதியம் இந்தப் புதிய சட்டமூலத்தையும் அதன் மூலமாக மாற்றங்களையும் பிரேரித்து ஆதரித்துள்ள நிலையில் முன்னைய ரணில் அரசினால் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

ஆனால் முதலீட்டுச் சபையின் ஊழியர்கள், பல முதலீட்டாளர்கள் மற்றும் கணிசமான எண்ணிக்கையிலான சட்ட வல்லுநர்களின் எதிர்ப்பின் பின்புலத்தில் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் புதிய அரசு பின் போட்டிருக்கின்றது. இழுத்தடிக்கின்றது.

"தற்போது இருக்கும் முதலீட்டுச் சபையை விட புதிய சட்டத்தின் கீழான உத்தேச பொருளாதார ஆணையத்திற்கு அதிக அதிகாரம் உள்ளது. இந்தப் புதிய கட்டமைப்பானது அடுத்த கட்டத்தை வழிநடத்தி, புவிசார் அரசியலில் ஏற்படும் மாற்றங்களைப் பயன்படுத்தினால், இலங்கை பொருளாதாரத்தில் மேம்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன்''என்று நிஷ்தர் கூறினார்.

இந்தப் போக்குகளைப் பார்த்தால் பொருளாதார மீட்சிக்கு ரணிலின் அரசு முன்னெடுத்த முயற்சிகளை இந்த அரசு போட்டடிக்கப் போகின்றதோ என்று சந்தேகம் இப்போது எழுந்துள்ளமை மறுக்க முடியாத நிலைமையாகும்.



# சம்மாந்துறை 'எஸ்' வாய்க்கால் வீதியை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை!

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )**

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்லரிச்சல் பகுதியில் இருந்து சம்மாந் துறை பொலிஸ் நிலைய பிரதான வீதியை இணைக்கும் 'ளு' வாய்க்கால் வீதியை புனர்நிர்மாணம் செய்து தருமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வருட இறுதியில் பெய்த கன மழை காரணமாக பாதிக்கப்பட்ட இந்த வீதியைப் பற்றி உரிய அதிகாரி களிடம் தெரியப்படுத்தியும், இதுவரை எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பிரதேச வாசிகள் குற்றம் சாட்டுகின் றனர்.

செட்டவட்டை, பூரான் புட்டி வட்டை போன்ற வயல் பிரதேசங்களுக்கு செல்லும் பிரதான பாதை இதுவாகும்.

அதுமட்டுமின்றி, இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் இவ்வீதியின் ஊடாக பாடசாலை, வைத்தியசாலை, பொலிஸ் நிலையம், பிரதேச செயலகம் போன்ற இடங்களுக்குச் செல்வது வழமை.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, விவசாயிகள் மற்றும் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.







# பெண்களின் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறை தொடர்பான கருத்தரங்கு

**(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)**

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரனின் வழிகாட்டலுக் கமைவாக நாவிதன்வெளி பிரதேசத்தில் உள்ள மகளிர் சங்க அங்கத்தவர்களுக் கான சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு மத்திய முகாம்- 01 பல்தேவைக் கட்டடத் தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னனியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் யூ.எல். ஹபீலா மற்றும் கள உத்தி யோகத்தர் ஆர்.அனுஷ்கா ஆகியோரும் மத்திய முகாம் 04 கிராம உத்தியோ கத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் டெ. றொசாயிறோ நிகழ்வில் கலந்து கொண்டு 'பெண்களின் சுகாதார பாது காப்பு நடைமுறைகள்' தொடர்பாகவும், 'சமூகத்தில் பெண்களுக்கான அந்தஸ்து என்ன' என்பது தொடர்பான தெளிவூட் டல்களை மகளிர் சங்க அங்கத்த வர்களுக்கு வழங்கினர்.

இந்த நிகழ்வுக்கான பூரண அனுசரணையை முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மேற் கொண்டிருந்தது.









# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இந்திய நிவாரணம்

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசால் 'இந்தியாவிலிருந்து அன்புடனும் அக்கறையுடனும்' எனும் தொனிப் பொருளில் வழங்கப்பட்ட உலர் உணவு பொதிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை வந்தடைந்துள்ளன.

அரச அதிபர் ஜஸ்டினா முரளிதரனின் வேண்டு கோளுக்கு அமைவாக 750 உலர் உணவுப் பொதிகள் மாவட்ட செயலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற 142 உலருணவுப் பொதிகளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமையில் இடம்பெற்றது.

அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பா . பிறேமமாலாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் (கிராம சேவகர்) மு. கங்காதரன் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் இணைந்து இந்தப் பொதிகளை வழங்கி வைத்தனர்.









# கிண்ணியா பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட கிண்ணியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று (15) பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

கிண்ணியா பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்தார்.

கிண்ணியா மகளிர் கல்லூரிக்கும் பெரிய கிண்ணியா ஆண்கள் பாடசாலைக்கும் அருகில் இருக்கும் ரெலிக்கொம் கோபுரத்தை மக்கள் செறிவு குறைந்த இடத்துக்கு மாற்றி அந்த காணியை கிண்ணியா மகளிர் கல்லூரிக்கு பெற்று கொடுத்தல்.

கச்சக்கொடுத்தீவில் உள்ள ஆரம்ப சுகதார பராமரிப்பு நிலையத்தை பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்துதல்.

ஆயிலடியில் ஆரம்ப சுகதார பராமரிப்பு நிலையம் அமைத்தல்.

வெள்ளங்குளம் சுகதார நிலையத்தில் வாரத்தில் இரண்டு நாள்கள் இயங்கும் நடமாடும் வைத்திய சேவையை நடத்துதல்.

அறுவடை காலம் ஆரம்பித்துள்ளதால் வெள்ளம் காரணமாக சேதமடைந்துள்ள வயலுக்கு செல்லும் பாதைகளை தற்காலிகமாக செப்பனிடல்.

இந்தக் கூட்டத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதியமைச்சரும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினருமான அருண் ஹேமச்சந்திரா, இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். முகம்மது கனி, திணைக்கள பொறுப்பதிகாரிகள், துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# “முத்துக்களின் முற்றத்து மல்லிகை” மண்ணில் மகுடம் சூடும் கௌரவிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ் )

மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டத்தின் ஊடக ஆலோசகர்களாக கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வரும் ஊடகவியலாளரும் அறிவிப்பாளருமான ஏ.எல்.எம். ஷினாஸ் மற்றும் ஊடகவியலாளர் றாஸிக் நபாயிஸ் ஆகியோர் அண்மையில் கிழக்கு மாகாண ஊடகத் துறைக்கான இளங்கலைஞர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இதனை வாழ்த்தி “முத்துக்களின் முற்றத்து மல்லிகை” எனும் கௌரவிப்பு நிகழ்வை மருதமுனையில் நாணல் கலை இலக்கிய வட்டம் நடத்தியது.



மருதமுனை பிரதேசத்தில் ஆற்றலுள்ள பெண்களை ஒன்றிணைத்து கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வரும் நாணல் கலை இலக்கிய வட்டத்தின் ஆரம்ப செயற்பாடுகள் தொடக்கம் இறுதி வரை இவர்கள் ஆலோசகர்களாக செயற்பட்டனர்.

ரேன்ஜ் வியூ நிறுவனத்தின் அனுசரணையோடு நடைபெற்ற இந்த நிகழ்வில், ரேன்ஜ் வியூ நிறுவனத்தின் நிதி திட்டமிடல் பணிப்பாளர் தல்ஹா, கவிஞர் விஜிலி, மருதமுனையில் முதலாவது பெண் கவியாழினி மாஜிதா தவ்பிக் உட்பட நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்கள், ஆர்வலர்கள், குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருது பெற்றுக்கொண்ட ஏ.எல்.எம்.ஷினாஸ், றாஸிக் நபாயிஸ் ஆகியோரை பாராட்டி நாணல் வட்டத்தின் உறுப்பினர்கள் கவிதைகள் மற்றும் உரைகளை நிகழ்த்தினர். இறுதியில் நாணல் கலை இலக்கிய வட்டம் இவர்களுக்கு நினைவு விருதை வழங்கிப் பாராட்டிக் கௌரவித்தது.




# சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை!

## எடுக்கக் கோருகிறார் கிழக்கு ஆளுநர்

(அபு அலா, ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண மீனவர் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் பிரதிநிதிகளுக்கும், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (15) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன் பிடிபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண மீனவர் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் ஆளுநரிடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்தனர். இந்த விடயம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி அவற்றுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார் என்று ஆளுநர் கூறினார்.

சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை எடுக் வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

# இலங்கையில் பால் உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை முன்னெடுப்பு

## கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

(த.சுபேசன்)



இலங்கையில் பால் உற்பத்தியானது 1977ஆம் ஆண்டுக்கு முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. இதனை மேம்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் இன்று (16) இடம்பெற்ற ஹைலண்ட் நிறுவன அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஹைலண்ட் நிறுவனம் அரசுக்குச் சொந்தமான நிறுவனம். அதனை முற்றுமுழுதாக விற்றுத் தீர்ப்பதற்கு கடந்த காலங்களில் பாரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அப்போது நாம் தேசிய மக்கள் சக்தி என்ற வகையில் பாரிய போராட்டங்களை முன்னெடுத்து வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ஹைலண்ட் நிறுவனத்தைத் தாரை வார்ப்பதைத் தடுத்து நிறுத்தியிருந்தோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த 2004-2005 காலப் பகுதிகளில் அமைச்சராக இருந்த வேளையில் தான் நஷ்டத்தில் இயங்கிய ஹைலண்ட் நிறுவனத்தை இலாபகரமான நிறுவனமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த வருடம் கூட இந்த நிறுவனம் பல மில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளது. அந்தப் பெருமை அனைத்துமே தற்போதைய ஜனாதிபதியையே சாரும்.

எதிர்காலத்தில் ஹைலண்ட் நிறுவனத்தை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாது. இந்த நிறுவனம் ஊடாக நாட்டில் பால் உற்பத்தியை, கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்த வேண்டும். இந்த நிறுவனம் ஊடாக பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கும். அதனூடாக நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும்.


1977ஆம் ஆண்டுக்கு முன்னர் 60 சதவீதமாக காணப்பட்ட இலங்கையினுடைய பால் உற்பத்தி இன்று 10 சதவீதமாக குறைவடைந்துள்ளது. பால் இறக்குமதிக்காக எமது பணத்தை இழக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

அந்தவகையில் தற்போது பால் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்புக்கு அரசு முன்னுரிமை அளித்து வருகின்றது. அதற்குரிய கடன் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதன் ஊடாக டொலர் இழப்பைத் தடுக்க முடியும். அதேநேரம் தேசிய உற்பத்தியையும் அதிகரிக்க இயலும்.

அதன் ஓர் அங்கமாகவே பால் உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் ஹைலண்ட் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது. இதற்கு மக்கள் ஆதரவளிக்க முன்வர வேண்டும்.- என்றார்.





# தமிழர்க்காக ஓங்கி குரல் தரும் ‘சிங்கள கொட்டி’ மருத்துவர் பிரைன் செனவிரத்தின !

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

**ஆட்சி மாற்றங்களினூடாகத் தமிழர்கள் தம் சிக்கல்கள் தீரும் என்ற உளவியலில் தமிழ் மக்கள் ஒரு போதும் இருக்கக் கூடாது என்பதில் தமிழர்கள் முதலில் தெளிவுற வேண்டும் என்பதையும் ஈழ விடுதலையே தமிழர்களுக்கான தீர்வு என்பதில் தமிழர்கள் உறுதியாக இருக்க வேண்டும் எனவும் எல்லா தமிழர்கட்கும் மருத்துவர் பிரைன் அவர்கள் அறிவுறுத்தி வந்தார்.**

**உண்மையை எப்போதும் உரக்கக் கூறும் மருத்துவர் பிரைன் செனவிரத்தின, தமிழ் மக்களுக்கு ஆதரவான தார்மீக நிலைப்பாட்டை என்றும் கொண்டிருப்பவர் . ஸ்ரீலங்காவின் அநீதிகளை உலகறிய செய்தவரும் ஈழத் தமிழர்களுக்காக என்றும் ஓங்கி குரல் கொடுக்கும், ‘சிங்களக் கொட்டி’ பிரைன் செனவிரத்னவின் பிறந்த நாளை முன்னிட்டு (16.01.1932- 16.01.2025) இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

பிரைன் செனவிரத்னவின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் சமூக நீதியை நிலைநாட்டுவதிலும் உள்ள உறுதியான அர்ப்பணிப்பு மானிடப் பிறவியாக பிறந்ததில் அவர் காட்டிடும் ஒரு உயர்வான பண்பாகும்.


### சிங்களக் கொட்டி
### (சிங்களப் புலி)

அத்துடன் அவரது நடத்தையிலும் பேச்சிலும் மிகவும் புலப்படும் ஒரு பேரார்வம், அவருடன் பழகும் நிமிடம் எல்லோரது இதயத்தைக் கவரும். இனம், மதம், மொழி மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட மற்றும் துன்புறுத்தப்பட்ட மக்களுக்காக அவரது வாழ்நாள் முழுவதும், உரிமைகளைப் பாதுகாப்பதில் உறுதியாக ஈடுபட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட சமூகங்கள், இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் அகதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் கலாநிதி செனவிரத்ன தீவிரமான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இது சம்பந்தமாக, கல்வி, சர்வதேச வாதங்கள், பரப்புரை மற்றும் ஈடுபாடு ஆகியவற்றின் மூலம் இந்தப் பாதிக்கப்பட்ட மக்களின் அவலநிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அவர் தனது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்துள்ளார்.

தமிழர் தேசத்தை ஒடுக்கும் சிங்கள பௌத்த பேரினவாத அரசானது உண்மையில் சிங்கள உழைக்கும் மக்களுக்கும் எதிரானது. அரசியல் புரிதல் கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சிங்களத் தோழர்கள் தாம் ஒரு அமைப்பாகத் திரண்டு ஒடுக்கும் சிங்கள பௌத்த பேரினவாத அரச இயந்திரத்தைத் தகர்ப்பதன் மூலம் சிங்கள உழைக்கும் மக்களையும் தேச ஒடுக்குமுறைக்கு உட்பட்டிருக்கும் தமிழர் தேசத்தையும் விடுதலையடையச் செய்ய வேண்டும் என்ற உறுதியுடன் மறவழியில் போராடுவது என்று ஆரம்ப காலத்தில் முனைப்புக் கொண்டு செயல்பட்டனர்.



தமிழர் விடுதலைப் போராட்டத்தை உலகறியச் செய்ததுடன், தாம் சார்ந்த உலகளாவிய வலைப் பின்னல்களைக் கொண்டு மனித உரிமை அமைப்புகள் ஊடாக ஒடுக்கப்படும் தமிழர்களின் உரிமைக் குரலை வெளிப்பட வைத்த பெருமையும் உண்டு.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் நேர்மையை வெளிப்படுத்தி, தமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி சர்வதேச அரங்கில் பேசி வருபவர் பிரைன் செனவிரத்ன.

### நாடற்றவர்களின் குரல்

1948 இல் பிரித்தானிய ஆட்சியில் இருந்து தீவு சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழ் சமூகத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கு எதிராகத் தைரியமான பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி வருகிறார்.

மேலும் இந்தியத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த இலங்கையைச் சேர்ந்த சுமார் ஒரு மில்லியன் நீண்ட கால குடிமக்களின் குடியுரிமையை 1948 இல் இரத்துச் செய்து, பெரும்பான்மை சிங்களவர்களால் உரிமை பறிக்கப்பட்டது.

தன்னிச்சையாக நாடற்றவர்களாக ஆக்கப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு ஆதரவாக அவர் பகிரங்கமாகப் பேசினார். 1840 களில் இருந்து தீவில் வாழ்ந்த மக்கள் மற்றும் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக உலகப் புகழ்பெற்ற ‘சிலோன் டீ’ ஐ உருவாக்க உழைத்தவர்கள் தீவின் பொருளாதாரத்தின் முக்கிய அம்சமாக மாறியுள்ளனர்.

சிங்களவர்களைப் பெரும்பான்மையாக ஆக்குவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைக் கைப்பற்றும் நோக்கத்துடன் மட்டுமே அரசு

தொடர்ச்சி ▼



# தமிழர்க்காக ஓங்கி குரல் தரும் ‘சிங்கள கொட்டி’ மருத்துவர் பிரைன் செனவிரத்தின !

**தொடர்ச்சி▲**

தீவின் பூர்வீகத் தமிழர்களின் நலன்களுக்குப் பங்கம் விளைவிக்கும் சட்டத்தை இயற்றியது.

**ஆஸ்திரேலியாக்கு புலம்பெயர்வு**

1976 இல் ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் அவர் நாடு திரும்பக் கூடிய சூழல் அவருக்கு ஏற்படவேயில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்சி மாற்றங்களின் ஊடாகத் தமிழர்கள் தம் சிக்கல்கள் தீரும் என்ற உளவியலில் தமிழ் மக்கள் ஒருபோதும் இருக்கக் கூடாது என்பதில் தமிழர்கள் முதலில் தெளிவுற வேண்டும் என்பதையும் தமிழீழ விடுதலையே தமிழர்களுக்கான தீர்வு என்பதில் தமிழர்கள் உறுதியாக இருக்க வேண்டும் எனவும் எல்லாத் தரப்புத் தமிழர்களுக்கும் மருத்துவர் பிரைன் அறிவுறுத்தி வந்தார்.

பிறப்பால் சிங்கள இனத்தவராக இருந்தாலும் ஈழத் தமிழரின் விடுதலையையும், உரிமைகளையும் சிங்கள மக்கள் அறியும்படி செய்து வருகின்றார். பெரும் கவலைகளுடன் சிறிலங்காவானது சிங்கள பௌத்த நாடு என்று சிங்களவர்கள் நம்புவதே, தமிழர்கள் மீதான இனவழிப்புக்குக் காரணம் என்றும் ஈற்றில் அது சிங்களவர்கள் தமக்குத்தாமே தோண்டும் சவக்குழியாக அமைந்துவிடும் என்றும் சிங்கள மக்களுக்கு இவர் இடித்துரைத்தும் வந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் பற்றி ஏற்றியோ போற்றியோ எந்தவொரு கருத்துகளையும் குறிப்பிடத்தக்க அளவில் பகிராத மருத்துவர் பிரைன், தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்ல, மாறாக ஒடுக்கும் அரசுக்கு எதிராகப் போராடும் போராளிகள் என்று உலகெங்கும் பரப்புரை செய்து வந்தார்.

**அனைத்துலக மட்டத்தில் பரப்புரை**

இறுதிக்கட்ட தமிழின அழிப்பு இடம்பெற்ற வேளையில் தனது முதுமையையும் கணக்கெடுக்காமல் உலகெங்கும் அலைந்து திரிந்து மாநாடுகள், கூட்டத்தொடர்கள், பல்கலைக்கழக நிகழ்வுகள் என அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி ஒடுக்கும் சிங்கள பௌத்த பேரினவாத அரசால் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் இன அழிப்பைப் பற்றியும் அதிலிருந்து தமிழர்களைக் காப்பாற்றுவது உலகின் கடமை என்றும் அனைத்துலக மட்டத்தில் பரப்புரை செய்தும் வருகின்றார்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் தமிழீழ தேசமானது சிங்கள அரசால் முற்றிலுமாக வன்கவரப்பட்ட பின்பான சூழலில், தனது முதிர்வையும் பொருட்படுத்தாது முன்னையதிலும் விரைவுடன் செயலாற்றி வந்தார். அதாவது, இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு நடந்தது இனவழிப்பே என்றும் அதற்குத் தீர்வாக தமிழர்களிடத்தில் தமிழீழம் கோரிப் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் தனது உரைகள் மூலமும் எழுத்துகள் மூலமும் கோரி வந்தார்.

தமிழர் விடுதலைப் போராட்டத்தின் விளைவுகள், தமிழர் மீதான சிங்களத்தின் இனவழிப்பு என்பவை தொடர்பில் 60 இற்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளதோடு உலக அரங்கில் இது தொடர்பில் பல கருத்துரைகளையும் நிகழ்த்தியுள்ளார்.

இறுதிநேரத்தில் எப்படியாவது தமிழர்கள் மீதான போரை நிறுத்திவிட வேண்டும் என்பதில் அவர் மேற்கொண்ட முயற்சிகளைத் தமிழினம் ஒருபோதும் மறக்கக்கூடாது. இவர் ஆஸ்திரேலிய தமிழ்க்காங்கிரசின் பணிப்பாளராக இருந்தவர் என்பதோடு பின்னர் நாடு கடந்த தமிழீழ அரசில் அதிகாரம் மிக்க பதவியிலுமிருந்தார்.

புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டு நாடுகடத்தப் படவிருக்கும் தமிழ் ஏதிலிகளை நாடு கடத்தவிடாது ஆஸ்திரேலிய மனித உரிமைச் செயற்பாட்டாளர்களையும் ஒருங்கிணைத்துப் போராடுவதில் இவர் முன்னின்று உழைத்தார்.

**தமிழர் இனப்படுகொலையை வெளிப்படுத்தயவர்**

அதேவேளை தமிழர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை வெளிப்படுத்தும் “சனல் 4” ஆவணப்படத்தை உலகெங்கிலும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் மருத்துவர் பிரைன் செனவிரத்தின முன்னின்று உழைத்தார்.

இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடு அனைத்து இன மக்களின் உரிமை மற்றும் கலாசாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் பூர்வீகம் வடக்கு மற்றும் கிழக்கு என மருத்துவர் பிரைன் செனவிரத்தின தெரிவித்திருந்தார்.

நீண்டகாலமாக சிங்கள பேரினவாத அரசின் பல தவறான செயற்பாடுகளைப் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டியதுடன் அவற்றுக்கு எதிராகவும் போராடினார். அத்துடன் சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளை உலகறிய செய்ததில் இவருக்கும் ஒரு பாரிய பங்குண்டு.

“The 1983 Massacre – Unanswered Questions”> “u;uman Rights Violations in Sri Lanka” (இது ஸ்ரீலங்காவால் தடைசெய்யப்பட்ட நூல்), “Rape of Tamil Women, Men And Children By Sri Lankan Armed Forces and Their Collaborators”, “UN u;uman Rights Council Fails to Address the u;umanitarian Disaster in the Tamil North and East of Sri Lanka” ஆகிய நூல்கள் இவரால் எழுதப்பட்டவற்றுள் முதன்மையானவை.



# மாவட்ட சுற்றுச்சூழல் சட்ட அமுலாக்கள் குழு கூட்டம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட சுற்றுச்சூழல் சட்ட அமுலாக்கல் குழு கூட்டமானது மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று (16) வியாழக்கிழமை இடம் பெற்றது.



இதன் போது மாவட்டத்தில் சுற்றுச் சூழல் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டங்கள் தொடர்பான விளக்கங்களை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் எஸ்.உதயராஜன் வழங்கினார்.

மாவட்ட மட்டத்தில் தீர்க்கப்படாத சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பாகத் துறைசார் நிபுணர்களுடன் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மணல் அகழ்வு, தொழிற்சாலைகளுக்கான அனுமதி வழங்கல், திண்மக்கழிவு மற்றும் மருத்துவக் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல், சட்டவிரோத மணல் அகழ்வு, சட்டவிரோத செயற்பாடுகள், கரையோரங்களை அடையாளப்படுத்தல், மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதன் போது சுட்டிக்காட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர்களான திருமதி சதர்ஷினி ஸ்ரீகாந்த், திருமதி நவருபரஞ்சினி முகுந்தன் (காணி), திட்டமிடல் பணிப்பாளர் வி.நவநீதன், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், துறைசார் நிபுணர்கள், சுற்றுச் சூழல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# பசுவை விழுங்கிய இராட்சத முதலை; மட்டக்களப்பில் பெரும் பரபரப்பு!

(பழுவூரான்)

அண்மைய நாள்களாக மட்டக்களப்பு வாவியில் இராட்சத முதலைகளின் நடமாட்டம் அதிகரித்து யவருவதுடன் கால்நடைகளை வேட்டையாடி வருவதாக வாவியை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் கால் நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று புதன்கிழமை (15) கல்லடிப் பாலத்துக்கு அண்மித்த பகுதியாகிய மட்டக்களப்பு அமிர்தகழி தீப்பாலத்துக்கு அருகாமையில் உள்ள வாவியில் பசுமாடு ஒன்றை முதலை பிடித்து சென்றுள்ளது.

இந்தக் காட்சி அந்தப் பகுதி மீனவர்கள் மற்றும் பொது மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சைப் அலிகான் மீது மர்ம நபர் கத்திக் குத்து

## மருத்துவமனையில் தீவிர சிகிச்சை






வீட்டினுள் புகுந்த மர்ம நபர் கத்தியால் குத்தியதில் காயமடைந்த நடிகர் சைப் அலிகானுக்கு மும்பை லீலாவதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாலிவுட்டில் முன்னணி நடிகராக வலம் வருபவர் சைஃப் அலிகான். இன்று அதிகாலை 2:30 மணியளவில் மும்பை பாந்த்ரா மேற்கு பகுதியிலுள்ள அவருடைய இல்லத்தில் கொள்ளை முயற்சி நடைபெற்றதாகத் தெரிகிறது. அப்போது நடைபெற்ற சண்டையில் சைப் அலி கான் காயம் அடைந்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மும்பை பொலிஸாரின் தகவலின் படி, அடையாளம் தெரியாத நபர் சைப் அலிகான் இல்லத்துக்குள் புகுந்துள்ளார் என கூறப்படுகிறது. அப்போது கத்தியுடன் வந்த நபருடன் மோதல் ஏற்பட்டதன் காரணமாக சைப் அலிகான் காயமடைந்துள்ளார் என தெரிகிறது. இந்தச் சம்பவத்துக்கு பிறகு லீலாவதி மருத்துவமனைக்கு சைப் அலி கான் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு ஏற்பட்டுள்ள காயம் பற்றி அவர் அனுமதிக்கப்பட்டுள்ள மும்பைலீலாவதிமருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி வைத்தியர் நீரஜ் உத்தமானி கூறுகையில்,

“சைப் அலிகான் அதிகாலை 3.30 மணிக்கு மருத்துவமனை அழைத்துவரப்பட்டார். அவருக்கு 6 இடங்களில் காயங்கள் இருந்தன. ஒரு காயம் அவரது முதுகுத் தண்டவடத்தின் அருகே உள்ளது. அதற்காக அறுவை சிகிச்சை செய்கிறோம். அறுவை சிகிச்சைக்குப் பின்னரே காயத்தின் தன்மை பற்றி மேலதிக தகவல்களைத் தெரிவிக்க முடியும்.” - என்றார்.

# நீர்மூழ்கி உட்பட 3 போர்க் கப்பல்கள் இந்திய கடற்படையில் இணைப்பு



கடற்படை பயன்பாட்டுக்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 3 போர்க் கப்பல்களை, மும்பை கடற்படை தளத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

கடற்படை பயன்பாட்டுக்காக பி.17.ஏ ரகம் மற்றும் பி.15.பி ரக கப்பல்கள் தயாரிக்க மும்பையில் உள்ள மசகான் டாக்ஸ் ஷிப் பில்டர்ஸ் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

இந்த இரு கப்பல்களின் வடிவமைப்பை இந்திய கடற்படையின் போர்க்கப்பல் வடிவமைப்பு பிரிவு உருவாக்கி கொடுத்தது. அதன்படி போர்க்கப்பல் மேற்பார்வை குழு கண்காணிப்பில், உலகத்தரத்துக்கு இணையாக இந்த 2 போர்க்கப்பல்களும் உருவாக்கப்பட்டன.

பி.17.ஏ ரக கப்பலான ஐ.என்.எஸ். நீல்கிரி கப்பல் கடலில் எந்த சூழ் நிலையிலும் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த போர்க்கப்பல் எதிரிநாட்டு ரேடார்களில் சிக்காத வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இதில் நவீன ஆயுதங்கள் மற்றும் சென்சார் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

எதிரி நாட்டு நீர்மூழ்கி கப்பல்கள், போர்க்கப்பல்கள், ஏவுகணைகள், விமானங்கள் நெருங்கினால் இதில் உள்ள சென்சார் கருவிகள் உடனடியாக கண்டுபிடித்து எச்சரிக்கை விடுக்கும். அவற்றை தாக்குதவதற்கு தேவையான அனைத்து ஆயுதங்களும் இந்த கப்பலில் உள்ளன.

இந்த போர்க்கப்பலுக்கு உதவியாக எந்த துணை போர்க்கப்பல்களும் செல்லத் தேவையில்லை. எங்கும் தனியாக செல்லும் முன்னணி கப்பலாக இது கடற்படையில் இருக்கும்.

அதேபோல், பி.15 .பி ரகத்தில் ஐ.என்.எஸ். சூரத் என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட போர்க்கப்பலில் இருந்து பிரம்மோஸ் மற்றும் பராக்-8 ரக வான் பாதுகாப்பு ஏவுகணைகளை ஏவமுடியும். மேலும், உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கி கப்பல் ஆயுதங்களும், சென்சார்கள் இதில் உள்ளன.

கப்பலின் அடிப் பகுதியில் சோனார் ஹம்சா என்ஜி, டார்பிடோ ஏவுகணைகளை ஏவும் ட்யூப் லாஞ்சர், ஏ.எஸ். டபிள்யூ ரொக்கெட் லொஞ்சர் ஆகியையவை இந்த கப்பலில் உள்ளன.

இந்திய கடற்படையின் முந்தைய போர்க்கப்பல்களை விட அதிகளவிலான வசதிகள், இந்த புதிய போர்க் கப்பல்களில் உள்ளன. எதிரி படைகளின் தாக்குதலையும் தடுக்கும் திறனும் இந்த போர்க்கப்பலில் உள்ளது.

பிரான்ஸ் நாட்டின் நேவல் குருப் நிறுவனத்துடன் இணைந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 6 ஆவது மற்றும் கடைசி பி.75 ஸ்கார்பீன் ரக நீர் மூழ்கி கப்பலுக்கு ஐ.என்.எஸ். வகஷீர் என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த 3 போர் கப்பல்களையும், மும்பை கடற்படை தளத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

“உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஐ.என்.ஸ். சூரத், ஐ.என்.எஸ், நீல்கிரி, ஐ.என்.எஸ். வகஷீர் ஆகிய 3 போர்க் கப்பல்கள் இந்திய கடற்படையில் இணைக்கப்படும் இன்றைய தினம் கடற்படை வரலாற்றிலும், தற்சார்பு இந்தியா திட்டத்திலும் மிக முக்கியமான நாள். இந்தியாவில் கடற்படைக்கு புதிய பலம் மற்றும் தொலைநோக்கை அளித்தவர் சத்ரபதி சிவாஜி மகாராஜ். அவர் பிறந்த மண்ணில், 21ஆம் நூற்றாண்டு இந்திய கடற்படையை வலுவாக்க மத்திய அரசு இன்று முக்கிய முடிவெடுத்துள்ளது. முதல் முறையாக 3 போர்க்கப்பல்கள் ஒரே நாளில் கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த 3 போர்க் கப்பல்களும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை என்பது நமக்கு பெருமையான விஷயம். இந்த 3 கப்பல்கள் தயாரிப்பில் தொடர்புடைய அனைவருக்கும் பாராட்டுக்கள்.

கடந்த 10 ஆண்டுகளில் 33 போர் போர்க்கப்பல்கள், 7 நீர்மூழ்கி கப்பல்கள் கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளன. நாட்டின் இராணுவ தளவாட உற்பத்தி 1.25 லட்சம் கோடி ரூபாவை கடந்து விட்டது. 100 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இராணுவத் தளவாடங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. “- என்றார்.






# இஸ்ரேல்- ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம்!

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் போர் நீடித்த நிலையில், இஸ்ரேல்- ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதியன்று, இஸ்ரேலுக்குள் புகுந்து ஆயிரக்கணக்கானோரைப் படுகொலை செய்து, நூற்றுக்கணக்கானோரை பணயக்கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச் சென்றிருந்தனர்.

இதையடுத்து, காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா, எகிப்து, கத்தார் நாடுகள் முயற்சித்து வருகின்றன. இதனிடையே, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப், எதிர்வரும் 20 ஆம் திகதி பதவி ஏற்கவுள்ளார்.

தான் பதவி ஏற்று இரு வாரங்களுக்குள் பணயக்கைதிகள் விடுவிக்கப்படவில்லை எனில் மிக மோசமான விளைவுகளை ஹமாஸ் படையினர் சந்திக்க நேரிடும் என ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், இஸ்ரேல்- ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீனிய கைதிகளையும் இஸ்ரேலிய பணயக்கைதிகளையும் பரிமாற்றம் செய்ய இரு தரப்பும் ஒப்புதல்




தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 15 மாதங்களாக நடைபெற்று வரும் காசா போர் முடிவுக்கு வரும் சூழல் ஏற்பட்டுள்ளது.

எனினும் இஸ்ரேல் தரப்பில் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான அமைச்சரவை இதற்கு ஒப்புதல் வழங்கினால்தான் இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல்- ஹமாஸ் இடையே நீடிக்கும் போரினால் இதுவரை 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காஸாவில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போர்நிறுத்த ஒப்பந்தம் முழுமையடையவில்லை

## இஸ்ரேலிய பிரதமர் தெரிவிப்பு

ஹமாஸுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னும் முழுமையடையவில்லை என்றும் இறுதி விவரங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகவும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

மத்தியஸ்தர்களான அமெரிக்காவும் கட்டாரும் ஒப்பந்தத்தை அறிவித்த சில மணிநேரங்களுக்குப் பின்னர் நெதன்யாகுவின் இந்த அறிக்கை வந்துள்ளது.

இஸ்ரேலும் ஹமாஸும் காசா பகுதியில் பேரழிவு தரும் போரை இடைநிறுத்த ஒப்புக்கொண்டதாக மத்தியஸ்தர்கள் நேற்று முன்தினம் அறிவித்தனர்.

இது எதிரிகளுக்கு இடையேயான கொடிய மற்றும் மிகவும் அழிவுகரமான மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை உயர்த்தியது.

மூன்று கட்ட போர்நிறுத்த ஒப்பந்



தம் காசாவில் உள்ள போராளிகள் மற்றும் இஸ்ரேலில் உள்ள நூற்றுக்கணக்கான பாலஸ்தீனிய கைதிகள் மற்றும் ஹமாஸால் சிறைபிடிக்கப்பட்ட பல இஸ்ரேலிய பணயக்கைதிகள் விடுவிப்பதை உறுதியளிக்கிறது.

மேலும் காசாவில் இடம்பெயர்ந்த நூறாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளில் எஞ்சியிருக்கும் பகுதிகளுக்கு திரும்ப அனுமதிக்கும்.

15 மாத காலப் போரால் அழிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் மனிதாபிமான உதவி தேவைப்படுவதையும் இது நிவர்த்தி செய்யும் என்றும் மத்தியஸ்தர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் வொஷிங்டனில் இருந்து ஒப்பந்தத்தை பகிரங்கப்படுத்தினார்.

இதனிடையே, ஹமாஸுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னும் முழுமையடையவில்லை என்றும், இறுதி விவரங்கள் கலந்தாலேசிக்கப்பட்டு வருவதாகவும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

கட்டாரின் பிரதமரும், ஜனாதிபதி ஜோ பைடனும் சில மணிநேரங்களுக்கு முன்னர் அறிவித்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்கிறாரா என்பதை நெதன்யாகு வெளிப்படையாகக் கூறவில்லை.

இது குறித்த ஒரு அறிக்கையில் நெதன்யாகு, தற்போது ஒப்பந்தம் தொடர்பான பணிகள் நடந்து வருவதாகவும் இறுதி விவரங்கள் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே முறையான பதிலை வெளியிடுவேன் என்றும் கூறியுள்ளார்.

கனடா முரசு
பக்கங்கள் 02
புதன்கிழமை 15/01/2025

## தகாத செயலில் ஈடுபட்ட அதிபருக்கு தண்டனை

கனடாவில் பாடசாலை ஒன்றின் அதிபர் தகாத செயலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில்தண்டிக்கப்பட்டுள்ளார்.

கனடாவில் ஒன்றாரியோ மாகாணம் ஹாலிபெக்

02







# கனடாவிற்கான சேவையை நிறுத்தும் பிளே ஏர்லைன்ஸ் விமான சேவை

**கனடாவிற்கான விமான சேவையை நிறுத்திக் கொள்வதாக பிரபல விமான சேவை நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.**

**முன்னணி விமான சேவை நிறுவனங்களில் ஒன்றான பிளே ஏர்லைன்ஸ் விமான சேவை நிறுவனம் கனடாவிற்கான சேவையை நிறுத்துவதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிட்டுள்ளது.**

**இதனால் ஏற்கனவே முன் பதிவு செய்து கொண்டவர்களுக்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது குறித்து அறிவிக்கப்படவில்லை.**

மலிவான விமான சேவை நிறுவனங்களில் ஒன்றாக பிளேயர் எயார் லைன்ஸ் கருதப்படுகின்றது.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியின் பின்னர் கனடாவிற்கான விமான சேவைகள் இடம்பெறாது என ப்ளே எயார்லைன்ஸ் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

ஐஸ்லாந்தில் இருந்து இந்த விமான சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எரிபொருள் செலவு உள்ளிட்ட ஏனைய செலவுகள் அதிகரிப்பு காரணமாக சேவையை முன்னெடுத்துச் செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனால், விமான சேவையை இடை நிறுத்துவதாக அறிவித்துள்ளது. கனடாவிற்கு விமான சேவைகளை முன்னெடுத்து வந்த சில சிக்கன விமான சேவை நிறுவனங்கள் ஏற்கனவே சேவையை நிறுத்திக்கொண்டுள்ளன.

# ட்ரம்பின் வரி விதிப்பால் கனடாவில் 500,000 பேர் வேலையிழக்கும் அபாயம்

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், தான் ஜனாதிபதியாக பதவியேற்றதும், கனடா மீது 25 சதவிகிதம் வரி விதிக்க இருப்பதாக எச்சரித்துள்ளார்.

அப்படி அவர் 25 சதவிகித வரி விதிக்கும் நிலையில், கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் மட்டுமே, 500,000 பேர் வேலையிழக்கும் அபாயம் உள்ளதாக மாகாண பிரீமியர் தெரிவித்துள்ளார்.

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது ட்ரம்ப் 25 சதவிகித வரி விதிப்பாரானால், அது பல்வேறு துறைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஒன்ராறியோ பிரீமியரான டக் போர்ட் கூறியுள்ளார்.

ட்ரம்பின் வரி விதிப்பால், பல துறைகளில், துறைகளைப் பொறுத்து



ஏராளமானோர் வேலையிழக்கும் அபாயம் உள்ளது என்று டக் போர்ட் கூறியுள்ளார்.

என்றாலும், தோராயமாக 450,000 பேர் முதல் 500,000 பேர் வரை வேலையிழக்கும் அபாயம் உள்ளதாக சம்பந்தப்பட்ட துறையினர் கூறுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆகவே, ட்ரம்பின் வரி விதிப்பை எதிர்கொள்வதற்காக கனேடிய மாகாணங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து திட்டமிடவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.இதற்கிடையில், ட்ரம்பின் வரி விதிப்பு தொடர்பில் ஆலோசனை செய்வதற்காக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவும் 13 மாகாணங்களின் பிரீமியர்களும் சந்திக்க இருக்கிறார்கள்.



# மாகாண முதல்வர்களுடன் பிரதமர் ட்ரூடோ சந்திப்பு

கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மாகாண முதல்வர்களுடன் விசேட சந்திப்பு ஒன்றை நடத்த உள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வரி விதிப்பு குறித்து விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் இந்த சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளது.

அனைத்து மாகாணங்களிலும் முதல்வர்கள் பிரதமருடன் சந்திப்பு நடத்த உள்ளனர் குறிப்பாக கனடிய ஏற்றுமதிகள் மீது வரி விதிக்கப்படும் என அமெரிக்க புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பு கனடாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் எதிர்வரும் 20 ஆம் திகதி ட்ரம்ப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் ஏற்படக்கூடிய நிலைமைகள் குறித்து ஆராய்வதற்கும் வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டால் அதனை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளது.

இந்த முக்கிய விடயங்களை ஆராயும் நோக்கில் பிரதமர் ட்ரூடோ மற்றும் மாகாண முதல்வர்கள் கலந்த ஆலோசனை செய்ய உள்ளனர்.

# டொரன்டோவில் வெடி பொருள்கள் பாதுகாப்பாக வெடிக்கப்பட்டன

டொரன்டோவில் பாதுகாப்பு பெட்டகம் ஒன்றில் மீட்கப்பட்ட வெடி பொருள்கள் பாதுகாப்பான முறையில் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளன.

ரொறன்ரோ பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். தென் எக்லின்டன் வீதியில் அமைந்துள்ள கட்டிடம் ஒன்றில் இவ்வாறு வெடி பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன என தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு பெட்டகம் ஒன்றில் இந்த வெடி பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வெடிபொருள்களை டொமி டொம்சன் பூங்காவிற்கு எடுத்துச் சென்று அங்கு பாதுகாப்பான முறையில் வெடிபொருள்கள் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளன.

இந்த வெடிபொருள்கள் வெடிக்கச் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் பாரிய சத்தம் எழும் என ஏற்கனவே அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.




எவ்வாறான வெடி பொருள்கள் வெடிக்கச் செய்யப்பட்டன என்பது குறித்த தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

## தகாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் அதிபருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலை அதிபருக்கு நான்கு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலை ஒன்றின் அதிபர் பதின்ம வயது சிறுமியரை துஷ்பிரயோகம் செய்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இணைய வழியில்மேற்படி அதிபர், சிறுமிகளை துப்பியோகம் செய்தார் எனவும் ஆபாச காணொளிகளை பகிர்ந்



தார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாலியல் தூண்டல்களை மேற்கொண்டார் என இந்த பாடசாலை அதிபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் பாடசாலை அதிபருக்கு நீதிமன்றம் நான்கு ஆண்டு சிறை தண்டனை விதித்துள்ளது. பிலிப்ஸ் கலஸ்கி என்ற பாடசாலை அதிபரே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளார்.

13 மற்றும் 14 வயதான சிறுமியர் இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மோசமான படங்கள், காணொளிகளை இந்த நபர் சிறுமியருடன் பகிர்ந்து கொண்டார் எனவும் தேவையற்ற பாலியல் தூண்டல்களையும் மேற்கொண்டார் எனவும் குற்றம் சுமத்தி வழக்கு தொடரப்பட்டிருந்தது.

கடந்த 2023 ஆம் ஆண்டு இந்த சம்பவம் இடம்பெற்று இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.